www.padippakam.com



# ஈழத்தவர் வரலாறு

## கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621ஆம் ஆண்டு வரை....


18

-செங்கை ஆழியான்-

சப்புமல் குமரபாவின் தந்தை மலையாள தேசத்திலிருந்து வந்த ஒருபணிக்கனாவான். (யானையைப் பழக்குபவன்) ஆறாம் பராக்கிரமபாகு அவனை உபசரித்து ,அவன் தேகவலியிலும் வாட்போர்திறத்திலும் ஈடுபட்டவனாய்த் தன் குலத்தினளாகிய ஒரு கன்னிகையை அவனுக்கு மணம் முடிப்பித்தான். அவர்களுக்கு இரு புத்திரர்களும் ஒரு புதல்வியும் பிறந்தனர். இரு புத்திரர்களையும் பராக்கிரமபாகு தத்தெடுத்து அரண்மனையில் வளர்த்தான். அவர்கள் வலிமையும் வீரமும் கொண்டவர்களாக மாறினர். மூத்தவனான சப்புமல் குமரயாவின் வலிமையும் படைத்திறனும் கோட்டை இராச்சியத்தில் அவனைப் பற்றிய கணிப்பை ஏற்படுத்தின. பராக்கிரமபாகுவிற்கு இது கவலையைக் கொடுத்தது. ஏனெனில் அவனது சொந்த மகளான உலகுடையதேவியின் வயிற்றுப்பிள்ளை ஜெய்வீரனுக்குத் தனக்குப் பின் கோட்டை அரசு கிடைப்பதற்கு சப்புமல்குமரயா தடையாக இருப்பானோ என அஞ்சி, யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றும் சிரமமான பணிக்கு உட்படுத்தினான் எனப் போர்த்துக்கேய வரலாற்றாசிரியர் குறித்துள்ளார். யாழ்ப்பாணத்தின் மீது படையெடுப்பதற்கு முன் சப்புமல் குமரயா யாழ்ப்பாண இராச்சியத்தின் எல்லைப்புற கிராமங்கள் பலவற்றை கைப்பற்றி, அவற்றிலிருந்து சிறைப்பிடித்தவர்களைக் கோட்டைக்கு கொண்டு வந்து எதிரியின் படைவலிமையை அவர்களிடமிருந்து அறிந்து கொண்டானென ராஜவலிய கூறுகிறது. கோட்டை இராசதானியின் பெரும்படை கரைமார்க்கமாக வடக்கு நோக்கி நகர்ந்தது. கோகிலவசந்தேஸ என்ற நூலில் இப்படை நகர்ந்த வழி விபரிக்கப்பட்டுள்ளது. கோட்டையிலிருந்து மேற்குக் கரையோரமாகப் புத்தளம் பூநகரி கரைப்பாதை வழியே இப்படை முன்னேறியது. உத்தர தேசத்தின் பண்டைய தலைநகரான பூநகரிச் சிங்கை நகர் எதிர்ப்பட்டிருக்கும். சப்புமல் குமராயாவின் படை சீரும் சிறப்போடு செழித்து விளங்கிய பொங்கெலி நீர்ச்சிங்கை நகரைச் சிதைத்து அழித்தது. வன்னிப் பிரதேசத்தில் சப்புமல் குமரயாவின் படையை எதிர்த்து வன்னியர்கள் நிற்கவில்லை. அவர்கள் ஏற்கனவே கோட்டை மன்னனின் மேலாணையை ஏற்றிருந்தார்கள். சிங்களப்படைக்கும் , தமிழ்ப்படைக்கும் இடையிலான முதாவது சண்டை சாவகக்கோட்டை (சாவகச்சேரி)யில் நிகழ்ந்தது. அங்கு விஜய நகர மன்னது சேனா வீரர்கள் சப்புமல்குமரயாவின் படையை எதிர்கொண்டு தோல்வியைத் தழுவிக்கொண்டனர். அதன் பின் சிங்களப்படை யாழ்ப்பாணப் பட்டினத்தை வந்தடைந்தது. அவனது படைமுன் எதிர் நிற்க இயலாது தமிழ்ப்படை தோற்றது. கனக சூரிய சிங்கையாரியான் தன்னிரு புதல்வர்களுடன் இந்தியாவிற்கு ஓடிப்போனான். சப்புமல் குமரயா யாழ்ப்பாணத் தலைநகரில் புகுந்து மதங்கொண்ட களிரெனக் கண்டாரைக் கொன்று அந்த நகர் ஆவணங்களுக்கெல்லாம் இரத்த வெள்ளம் பாய்ந்தோடும் ஆறுகளாக்கி நகரில் விளங்கிய மாட மாளிகைகளை எல்லாம் இடிப்பித்து தரைமட்டமாக்கினான். யாழ்ப்பண நகர் சிதைந்து போனது. அவ்வேளை நல்லூர்க் கந்தசுவாமி கோவிலும் தகர்த்தெறியப்பட்டது. கி.பி. 1248 ஆம் ஆண்டு புவனேகபாகு எனும் அமைச்சரால் முதன் முதல் கட்டப்பட்ட நல்லூர்க் கந்தசுவாமி கோவில் கி.பி. 1450 ஆம் ஆண்டு சப்புமல் குமரயாவின் படையெடுப்பால் தகர்த்தழிக்கப்பட்டது . தான் புரிந்த பாவத்திற்கு பரிகாரம் தேடுவது போன்று, யர்ழ்ப்பாண நகரியை மீண்டும் புதுப்பித்த சப்புமல்குமரயா அழிந்து போன கந்தசுவாமி கோவிலையும் மீண்டும் ஆக்கினான். சப்புமல்குமரயா என்ற செண்பகப் பெருமாள் தமிழ்க்குருதி தன் நாளங்களில் ஓடக் கொண்டவனாதலாலும் தமிழுற்பத்தியாளனேயாகிய அளகேஸ்வரன் காலந்தொட்டு ஜயவர்த்தன கோட்டையிலே வழிபாடு பயின்று வந்தமையாலும் கோகில சந்தேசமுடையோர் அவனைப் புத்தமதத் தாபகரென புகழ்ந்தோதியவிடத்தும் தமிழ்பிரசைகளுக்கிதமாய் தமிழ்த்தெய்வழிபாடுகளை யாழ்ப்பாணத்தில் வளர்த்திருப்பான் என்பதிற் சிறிதும் சந்தேகமன்று என சுவாமி ஞானப்பிரகாசர் குறிப்பிடுகிறார். ஆரியச் சக்கரவர்த்தியோடு செண்பகப் பெருமாள் கடும் போர் நிகழ்த்திய நாட்களில் அரண்களும் இராசதானியும் பெரிதும் அழிவுற அவற்றைச் செண்பகப் பெருமான் திருத்தியமைத்தானென்றே கொள்ளவேண்டும். சப்புமல்குமரயா யாழ்ப்பாணப் பட்டினத்தில் கோட்டைகளையும் காவலரண்களையும் அமைத்தான் என்று ராஜவலிய சொல்வனவும் இக்கருத்துக்கு ஆதாரமாகவுள்ளன. ஆரியச் சக்கரவர்த்திகளின் பழைய தலைநகரமாக விளங்கிய யாழ்ப்பாண நகரி பாழாகி விட்டமையினால் இவன் நல்லூரைத் தலைநகராக்கிக் கொண்டான். உண்மையில் பதினைந்தாம் நூற்றாண்டிலேயே நல்லூர் தலைநகரமாக மாறியது. யாழ்ப்பாணத்தை வென்ற புகழ் சிங்கள நாடெங்கும் பரவிப் பேரானந்தத்தை விளைவித்து இவ்வெற்றியை புகழ்ந்த கோகில் சந்தேசவெனும் குயில் விடு தூதைப் பாடிய சிங்களப் புலவர் ஒருவர் சப்புமல் குமரயாவை 'ஆரிள வேட்டிடயாடும் பெருமாள்' எனப் புகழ்ந்துள்ளார். சப்புமல் குமரயா ஸ்ரீ சங்க போதி புவனேகபாகு என்னும் சிம்மாசனப் பெயரோடு யாழ்ப்பாண இராச்சியத்தின் மன்னனானான். சிறி சங்கபோதி புவனேகபாகு நல்லூரிலிருந்து உத்தரதேசத்தை பதினேழு வருடங்கள் ஆட்சி செய்தான். கி.பி. 1467 ஆம் ஆண்டு அவன் தென்னிலங்கைக்குத் திரும்பிச் செல்ல நேர்ந்தது. அவனுடைய வளர்ப்புத் தந்தை ஆறாம் பராக்கிரமபாகு இறந்து போக, அவனது பேரன் ஜெயவீரன் கோட்டைக்கு அரசனானான். அதனை விரும்பாத ஸ்ரீ சங்கபோதி புவனேகபாகு , விஜயவாகு என்பவனை யாழ்ப்பாணத்தின் அரசனாக்கிவிட்டு கோட்டைக்கு மீண்டு ஜெயவீரனைக் கொன்று விட்டு அரசகட்டிலேறினான். தருணத்தை எதிர்பார்த்து திருக்கோவிலூரில் காத்துறைந்திருந்த கனகசூரிய சிங்கையாரியனும்அவனது இரு புதல்வர்களும் சேனைகளுடன் வந்து விஜயபாகுவைக் கொன்று இழந்த இராச்சியத்தை மீட்டுக்கொண்டனர். மீண்டும் இழந்த மணிமுடியை தரித்துக் கொண்டான். அவன் பின் அவனது மூத்த மகனான பரராசசேகரன் கி.பி.1478 ஆம் ஆண்டு சிங்கைப் பரராசகேரன் என்ற சிம்மாசனப் பெயரோடு மன்னனானான். நல்லூரை மேலும் சிறப்பு மிக்க நகராக்கியவன் சிங்கைப் பரராசசேகரன் ஆவான். சப்புமல் குமரயாவின் படையெடுப்பால் அழிவுற்றதை புனருத்தாரணம் செய்திருப்பதாக கொள்ள இடமுண்டு. விசயகாலிங்க ஆரியனால் கட்டப்பட்ட கோயில்களை இவனே அமைத்ததாக வரலாற்று மயக்கமுள்ள போதிலும் சட்டநாதர் கோயில், வெயிலுகந்த பிள்ளையார் கோவில், கைலாயநாதர் கோவில் , வீரமாகாளியம்மன் கோவில் என்பனவற்றை இவன் மீண்டும் புனரமைத்தான் எனக் கொள்ளல் வேண்டும். சிங்கைப் பரராசசேகரனே தமிழ்ச்சங்கம் ஒன்றை நல்லூரில் நிறுவிய அரசனாவான். பரராசசேகரனின் சகோதரன் செகராசசேரகன் சிறந்த தமிழறிஞனாவான். பரராசசேகரம் என்ற வைத்திய நூல் ,'செகராசசேகரம் என்ற சோதிட நூல், இரகுவம்சம் என்ற காவிய நூல் என்பன பரராசசேகரன் காலத்தில் இயற்றப்பட்டவை என வைபவமாலை கூறும். இரகுவம்சத்தை இயற்றிய அரசகேசரி பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்தவரென்பது ஒரு சாரசரின் முடிவு. சிங்கைப் பரராசசேகரனுக்கு சிங்கவாகு ,பண்டாரம், பரநிருபசிங்கன், சங்கிலி என நான்கு ஆண்மக்களும் ஒரு பெண்ணுமாக ஐந்து குழந்தைகள் இருந்தனர். ஆனால் போர்த்துக்கேய நூல்களைக் கொண்டு 'வக்கிரத்துக் குறி பண்டார' , 'சியங்கேரி' என விரு பெயர்களே அறியக்கிடக்கின்றன. பரராசசேகர மன்னனின் பிற்காலம் மிகத் துயர் நிறைந்ததாக இருந்துள்ளது. கடைசி மகனான சங்கிலியே அத்துயருக்குக் காரணமாவான். யாழ்ப்பாண வைபவமாலை இந்தச் சங்கிலியையும் போர்த்துக்கேய வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்ற யாழ்ப்பாணவரசின் கடைசி மன்னனான சங்கிலி குமாரனையும் ஒருவென மயங்கி எழுதியுள்ளார்.

சிங்கைப் பரராசசேகரன்

கனகசூரிய சிங்கையாரியன்



(தொடரும்)

படிப்பகம்